### சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.வின் சார்பாக

# ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



மனசாட்சியே இல்லாமல் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தொடர்ந்து பா.ஜ.க. அரசு நடந்து வருகிறது. மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியை திணிக்க முயலும் ஒன்றிய அரசு அதை ஏற்க மறுக்கும் தமிழகத்தை வஞ்சிக்கும் நோக்கிலும், மாணவ மாணவியரின் கல்வியை பாழாக்கும் விதமாகவும் மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய கல்வி நிதியை தர மறுத்தும் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய திட்ட நிதியை வேறு மாநிலங்களுக்கு மாற்றியும் தொடர்ந்து செயல்பட்டு நடந்து வருகிறது.

அதுபோல ஏழை எளிய கிராம மக்கள் பயன்பெறுவதற்காக காங்கிரஸ் தலைமையில் ஆட்சி நடந்த போது கொண்டு வரப்பட்ட 100 நாள் வேலை உறுதித் திட்ட (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட) நிதியான ரூ.4034 கோடியை கடந்த 4 மாதங்களாக தமிழ்நாட்டிற்கு வழங்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுபற்றி கேள்வி எழுப்பிய போதும் மௌனம் காத்து தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசினை கண்டித்து சேலம் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் நாளை 29.03.2025 சனிக்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் அனைத்து கழக ஒன்றியங்களிலும் முறையே இரண்டிரண்டு இடங்களில் பொதுமக்களை திரட்டி நடைபெறும். இதற்கு கழகத் தோழர்கள் மட்டுமல்லாது பாதிக்கப்பட்டுக் கொண்டுள்ள பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

| வ.எண் | ஒன்றியம் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 1 | காடையாம்பட்டி கிழக்கு | 1.ஊராட்சி ஒன்றிய அலுவலகம், காடையாம்பட்டி<br>2.வேப்பிலை ஊராட்சி வே.கொங்கரப்பட்டி | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |
| 2 | காடையாம்பட்டி மேற்கு | 1. தீவட்டிப்பட்டி பேருந்து நிலையம்<br>2. காருவள்ளி, சின்னதிருப்பதி | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |
| 3 | ஓமலூர் கிழக்கு | 1. ஊராட்சி ஒன்றிய அலுவலகம், ஓமலூர்<br>2. கொல்லப்பட்டி ஊராட்சி தட்டாஞ்சாவடி | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |
| 4 | ஓமலூர் வடக்கு | 1. பொட்டியபுரம்<br>2. வெள்ளாளப்பட்டி | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |
| 5 | ஓமலூர் தெற்கு | 1. முத்துநாயக்கன்பட்டி<br>2. தொளசம்பட்டி | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |
| 6 | தாரமங்கலம் கிழக்கு | 1. செலவடை ஆவின் கடை அருகில்<br>2. K.R.தோப்பூர் – பவர்கிரிட் அருகில் | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |
| 7 | சேலம் வடக்கு | 1.ஊராட்சி மன்ற அலுவலகம், சர்கார் கொல்லபட்டி<br>2.மல்லமூப்பம்பட்டி மூலக்கடை | காலை 10.00 மணி<br>காலை 11.00 மணி |

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் மத்திய மாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதிக் கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், ஊராட்சி கிளைக் கழக செயலாளர்கள், பேரூர் வார்டு கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, தொழிலாளர் அணி. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு அயலக அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய பகுதி, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

### 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசை கண்டித்து

# மதுரை தெற்கு மாவட்ட ஒன்றிய கழங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிவிப்பு!



மதுரை தெற்கு மாவட்ட திமுக விற்கு உட்பட்ட ஒன்றிய கழகங்களில் 29.03.2025 சனிக்கிழமை அன்று காலை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் உறுதித் திட்டத்தின் (MGNREGS) 100 நாள் வேலைக்கு தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

அதுசமயம் ஒன்றிய கழக செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்யும்படியும், தங்கள் பகுதியில் நடைபெறும், இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழகத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், நிர்வாகிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் பூத் முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| வ. எ | ஒன்றிய கழகங்கள் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் | ஏற்பாடு மற்றும் தலைமை |
|---|---|---|---|
| **திருமங்கலம் சட்டமன்ற தொகுதி** | | | |
| 1. | திருமங்கலம் மேற்கு ஒன்றியம் | 1. செக்கானூரணி – ஆ.கொக்குளம் ஊராட்சி<br>2. கரடிக்கல் | கொ.தனபாண்டியன், ஒன்றிய கழக செயலாளர் |
| 2. | திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் | 1. கப்பலூர்<br>2. விடத்தகுளம் – வடகரை ஊராட்சி | து.தங்கப்பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர் |
| 3. | திருமங்கலம் தெற்கு ஒன்றியம் | 1. ஆலம்பட்டி<br>2. மீனாட்சிபுரம் – சௌடார்பட்டி ஊராட்சி | ஆர்.வி.சண்முகம், ஒன்றிய கழக செயலாளர் |
| 4. | கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் | 1. மருதங்குடி<br>2. செங்கப்படை | கே.எஸ்.இராமமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர் |
| 5. | கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் | 1. கள்ளிக்குடி<br>2. வில்லூர் | பா.மதன்குமார், ஒன்றிய கழக செயலாளர் |
| 6. | தே.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியம் | 1. வன்னிவேலம்பட்டி<br>2. சின்னாரெட்டிபட்டி | வ.நாகராஜன், ஒன்றிய கழக செயலாளர் |
| 7. | தே.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றியம் | 1. டி.குன்னத்தூர்<br>2. கொல்லவீரம்பட்டி – கெஞ்சம்பட்டி ஊராட்சி | த.பாண்டியன், ஒன்றிய கழக செயலாளர் |
| 8. | தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம் | 1. சந்தையூர்<br>2. சிலைமலைப்பட்டி | த.தனசேகரன், ஒன்றிய கழக செயலாளர் |
| **திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி** | | | |
| 9. | திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றியம் | 1. விளாச்சேரி<br>2. நாகமலைபுதுக்கோட்டை | வீ.பெரியசாமி, ஒன்றிய கழக செயலாளர் |
| 10. | திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றியம் | 1. விரகானூர்<br>2. குசவன்குண்டு | சி.தனபாலன், ஒன்றிய கழக செயலாளர் |
| 11. | திருப்பரங்குன்றம் தெற்கு ஒன்றியம் | 1. வலையங்குளம்.<br>2. கூத்தியார்குண்டு – நிலையூர் I பிட் ஊராட்சி. | வெ.வேட்டையன், ஒன்றிய கழக செயலாளர் |
| **உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி** | | | |
| 12. | உசிலம்பட்டி தெற்கு ஒன்றியம் | 1. பி.பெருமாள்பட்டி – போத்தம்பட்டி ஊராட்சி<br>2. கணவாய்பட்டி – வகுரணி ஊராட்சி | எஸ்.வி.எஸ்.முருகன், ஒன்றிய கழக செயலாளர் |
| 13. | உசிலம்பட்டி மேற்கு ஒன்றியம் | 1. தொட்டப்பநாயக்கனூர்<br>2. கொங்கபட்டி – வடுகப்பட்டி ஊராட்சி | எம்.பி.பழனி, ஒன்றிய கழக செயலாளர் |
| 14. | உசிலம்பட்டி வடக்கு ஒன்றியம் | 1. சீமானூத்து<br>2. உத்தப்பநாயக்கனூர் | க.அலெக்ஸ்பாண்டி (எ) அஜித் பாண்டி ஒன்றிய கழக செயலாளர் |
| 15. | செல்லம்பட்டி வடக்கு ஒன்றியம் | 1. பாப்பாபட்டி<br>2. விக்கிரமங்கலம் | செ.சுதாகரன், ஒன்றிய கழக செயலாளர் |
| 16. | செல்லம்பட்டி தெற்கு ஒன்றியம் | 1. செல்லம்பட்டி<br>2. கருமாத்தூர் | த.முத்துராமன், ஒன்றிய கழக செயலாளர் |
| 17. | சேடபட்டி வடக்கு ஒன்றியம் | 1. சேடபட்டி<br>2. உத்தப்புரம் | இ.ஜெயச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர் |
| 18. | சேடபட்டி தெற்கு ஒன்றியம் | 1. அத்திப்பட்டி<br>2. சாப்டூர் | கு.சங்கரபாண்டியன், ஒன்றிய கழக செயலாளர் |
| 19. | சேடபட்டி மேற்கு ஒன்றியம் | 1. டி.ராமநாதபுரம் – துள்ளுக்குட்டி நாயக்கனூர் ஊராட்சி<br>2. சீல்நாயக்கன்பட்டி | மு.செல்வபிரகாஷ், ஒன்றிய கழக செயலாளர் |

**சேடபட்டி மு.மணிமாறன்.**
செயலாளர், மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் அமைந்துள்ள, ஆவடி மாநகராட்சி தொடக்கப்பள்ளியின், நூற்றாண்டு விழா நடைபெற்றது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு மரக்கன்று நட்டு வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மாநகர மேயர் உதயகுமார் மாநகர ஆணையர் கந்தசாமி, சண் பிரகாஷ், நாராயணபிரசாத், பொன் விஜயன் மாமன்ற உறுப்பினர்கள் சத்யா கோ.ரவி, சாந்தி, கீதா, ரேவதி மற்றும் கழக நிர்வாகிகள் ஆசிரியர்கள் உள்ளனர்.

### அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலை! கே.எஸ்.எம். நாதன் தலைமை! சென்னை கிழக்கு –

# எழும்பூர் தொகுதியில் கிறிஸ்துவ போதகர்களுக்கு நல உதவிகள்!

## இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. – சங்கை ஏ. சுவர்ணராஜ் வழங்குகின்றனர்!

சென்னை,மார்ச்.28-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு மனிதநேயம் - 35 பரிசுத்தம் செய்வோம் மாநிலத்தை! பலன் செய்து காப்போம் திராவிடத்தை! என்ற தலைப்பில் இன்று (28.3.2025 வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி அளவில் சென்னை, டவுட்டன் ரித்தர்டன் சாலையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. மஹாலில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன் தலைமையில் கிறிஸ்துவ போதகர்களுக்கு கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க தலைவர் இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ., சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் சங்கை ஏ.சுவர்ண ராஜ் ஆகியோர் நல உதவிகளை வழங்கி வாழ்த்துரைக்கிறார்கள்.

இதில் மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன். எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, இ. பரந்தாமன், ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், எழும்பூர் தொகுதி பார்வையாளர் பி.எம். யாழினி, கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் வி. சுதாகர், சொ.வேலு, மாவட்ட அவைத்தலைவர் கோ.ஏகப்பன், பா.ஸ்ரீராமுலு எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., பரிதி இளம் சுருதி எம்.சி., தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆ. நிர்மலா தேவி, எல். சுந்தர்ராஜன் எம்.சி., பாத்திமா முசாபர் எம்.சி., மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைத் தலைவர் ஜெ. பாலமோகன், மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் எம்.பெரோஸ்கான், எல்.ஜான்ரூவில், என்அம்புரோஸ், ஆர்.அருண்குமார், எம்.ஸ்டாலின், ஜி.மெல்வின்ஜோதி, எ.சந்தானராஜ், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ரசூல், டி.வி. வேலு, எம்.மலர் மாறன், கே. அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், ஆர். பாபு எஸ்.டால்பின் அரி, இ. மொய்தீன், வான்மதி கதிரவன், எம்.தில்லைகுமார், பி.சி. சம்பத்குமார், ஜெ.கே. கருணாகரன், கே. வள்ளி, சூளை சுப்புராயலு, தி. தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர். எம். ரங்கநாதன், சி.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் 58 வது வட்ட செயலாளர் வி. விஜயகுமார் நன்றி தெரிவிக்கிறார்.

### பல்லாவரம் தொகுதியில்

# மின் கம்பிகளை புதைவடக் கம்பிகளாக மாற்றித் தருக!

## சட்டப்பேரவையில் இ.கருணாநிதி கோரிக்கை!

சென்னை, மார்ச். 28-

பல்லவபுரம் சட்டமன்றத் தொகுதியில் உயரே செல்லும் மின் கம்பிகளை புதைவடங்களாக அமைக்கும் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் பல்லாவரம் இ.கருணாநிதி கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**இ.கருணாநிதி:** எனது பல்லாவரம் தொகுதியில், ஆண்டுதோறும் மழைக்காலங்களில் பல பகுதிகளில் மரக் கிளைகள் மின் கம்பங்கள் மீது விழுந்து, மின் தடை ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்கும்பொருட்டு, 4 ஆண்டுகளுக்கு முன்பாக, பூமிக்கு அடியில் செல்கின்ற புதைவடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. அப்பணிகள் எப்போது முடிக்கப்படும், அவை எப்போது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

**அமைச்சர் வி.செந்தில் பாலாஜி:** உறுப்பினர் அவர்கள் பல்லாவரம் சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தவரையில், தொடர்ந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடிதம் மூலமாகவும் வழங்கியுள்ளார்கள். அந்தப் பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில், வருகின்ற 30-6-2025-க்குள் அந்தப் பணிகள் முழுமையான அளவில் முடிக்கப்பட்டு, இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### தஞ்சை பெருவுடையார் பெரியகோவிலில்

# இலவசமாக தங்கும் விடுதி அமைக்க வேண்டும்!

## பேரவையில் – தஞ்சை டி.கே.ஜி.நீலமேகம் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 28 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது தஞ்சை டி.கே.நீலமேகம் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் இரா. இராஜேந்திரன் அளித்த பதிலும் வருமாறு:

**டி.கே.ஜி. நீலமேகம்:** உலகப் புகழ் பெற்ற தஞ்சைப் பெருவுடையார் பெரியகோயில் மிகப் பிரசித்தி பெற்றது. அந்த பகுதியிலே இலட்சக்கணக்கான பக்தர்கள் இப்போது வந்து செல்கிறார்கள்; அதுவும் விடுமுறை நாட்களில் அங்கு மிகப் பெரிய கூட்டம். எனவே, அங்கு இலவசமாகவும், தங்கும் விடுதி அமைத்தும் அதனை ஒரு சுற்றுலாத் தலமாக மிகப் பெரிய அளவில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிக்கு உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் எப்படி வடக்கே இருக்கிறதோ, அதைப்போல தெற்கே தஞ்சை பெரிய கோயில் பிரசித்தி பெற்றது. அமைச்சர் அவர்கள் அதை நேரடியாக பார்வையிட்டு, அதற்கான பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் இரா. இராஜேந்திரன்:** தஞ்சை பெரிய கோயிலைப் பொறுத்தவரை பழமையான 1,000 ஆண்டுகளுக்கு மேலான கோயில். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஆயிரமாவது ஆண்டினை விழாவாக எடுத்தார்கள். நம்முடைய உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை, நம்முடைய தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி அவர்கள், ஒன்றிய அரசிலே நிதி கேட்டு அதற்காக 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலாத் துறையும், இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து அந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் .



இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி மேற்கு ஒன்றியம் சார்பில் அகூர் கிராமத்தில் கோடை காலத்தை முன்னிட்டு ஒன்றிய கழக செயலாளர் என். கிருஷ்ணன், தலைமையில் தண்ணீர் பந்தலை மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம். எல்.ஏ திறந்து வைத்து நீர் மோர் இளநீர் குளிர்பானங்கள் பழ வகைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கினார் உடன் அகூர் மாணிக்கம், டி.ராமதாஸ், சுசிலா சுப்பிரமணி, வேலாயுதம், பா.டில்லி பாபு, விஜி, மனோகர், ஐயப்பன், கோவேந்தன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.